விலை ரூபா: 14.00 பக்கங்கள்:-(10+16)

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI






சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 05 வியாழக்கிழமை (18.04.2002) தொலைபேசி 3378 ஒலி 120






## விடுதலைப் புலிகள் இன்று தீவகம் செல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இன்று தீவகப் பகுதிக்குச் செல்லவுள்ளனர்.தீவகப் பகுதிகளில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபிகளுக்குச் சென்று அஞ்சலி செலுத்தும் புலி உறுப்பினர்கள் தீவகப் பகுதி மக்களையும் சந்தித்துப் பேச உள்ளனர்.

மண்டைதீவு, தம்பாட்டி, ஊர்காவற்துறை, மெலிஞ்சிமுனை, புளியங்கூடல், வேலணை மற்றும் சாட்டி ஆகிய பிரதேசங்களுக்கு விடுதலைப்புலிகள் செல்ல உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-75)

## தமிழர் தாயகத்தை வலியுறுத்தி

# யாழ் மண்ணில் நேற்றுப் பொங்குதமிழ்

# அலைகடல் என மக்கள் திரண்டனர்

## தலைவர் பிரபாவின் உருவப்படத்தைத் தாங்கினர்

(அலுவலக நிருபர்)

**தமிழீழ உணர்வுடன் அலையலையாகத் திரண்டுவந்த ஜன சமுத்திரத்தின் மத்தியில் தமிழீழ தாயகக் கோட்பாட்டிற்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் வரலாறு காணாத "பொங்கு தமிழ்" எழுச்சி விழா நேற்று யாழ்ப்பாணத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.**

**ஏழு ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற உணர்ச்சி மிகு எழுச்சி ஊர்வலங்களுடன் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் லட்சக் கணக்கான தமிழ் மக்களின் சுதந்திர உணர்வுகள் பொங்கி வழிய பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டனர்.**

தமிழ் மக்களின் சுயநிர்ணய கோஷங்களுடனும், புரட்சி கீதங் றல் ஆகிய இடங்களில் இருந்து

## அல்லைப்பிட்டியில் தலைவர் பிரபாகரன் படத்தை படையினர் பறித்தெறிந்தனர்

### இளைஞர் ஒருவரும் கடுமையாக தாக்கப்பட்டார்

(ஊர்காவற்றுறை)

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தீவக மக்களை அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து கடுமையான உடற்சோதனைக்கு உட்படுத்தியதுடன் இளைஞர் ஒருவரைத் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

நேற்றிரவு 8.40 மணியளவில் அல்லப்பிட்டியில் மக்களை கடுமையான சோதனைக்குட்படுத்திய கடற்படையினர் அவர்களின் கைகளில் கொண்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படத்தையும் பறித்தெடுத்துள்ளனர்.

இதேவேளை இளைஞர் ஒருவர் தலைவரின் உருவப்படத்தை மறைத்துக்

(10ம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ்ப் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

அப்பொங்கு தமிழ் பிரகடனத்தில்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தனித்துவமான தேசியஇனம் என்பவற்றை அங்கீகரிக்கக்கோரி யாழ்குடாநாட்டு மக்கள் 2.00 மணிக்கு மும்முனைகளூடாக கிளர்ந்தெழுந்து தமிழீழத்திற்கான உணர்ச்சி கோஷங்களுடனும், புரட்சி கீதங்களுடன் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை வந்தடைந்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம், யாழ் நகரத்தின் மத்தி நல்லூர் கந்தசாமி கோயில் முன்றல் ஆகிய இடங்களில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் ஊர்வலங்கள் ஆரம்பமாகின.

வடமாராட்சி, தென்மராட்சி பகுதி மக்கள் நல்லூர்க் கந்தசாமி

(10ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் பல்கலைக்கழக சமூகத்தால் பொங்கு தமிழ் பிரகடனம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது. ஒடுக்கு முறைக்குள் சிக்கி/அச்சத்தில் உறைந்து போயிருந்த நாம்/ எம்முறவுகள் அருகில் வந்ததினால்/ கிடைத்த பலத்தில்/ அச்சங்களைந்து வெளியே வந்துள்ளோம்.

இன்று நடைபெறும் சமாதான முறைவழி எமக்கு/ நிரந்தரமானதும்/ கௌரவமானதுமான ஒரு தீர்வைத் தர வேண்டும். நமது அபிலாசைகள் யாவை என்பதைத் தெளிவாக இந்த உலகிற்கு உரைக்க வந்துள்ளோம்.

எங்கள் மரபுவழித் தாயகமும் தமிழ்த் தேசியமும் ஏற்கப்பட்டு எங்கள் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கும் ஒரு அரசியல் தீர்வே எம் அபிலாசை என்பதை பொங்கு தமிழ்

(10ம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

4ம், 5ம் பக்கங்களில் பொங்கு தமிழ் எழுச்சி காட்சிகளைக் காணலாம்

# பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகளின் தடையை நீக்க வேண்டும்

## நோர்வேக் குழுவிடம் பிரபா வலியுறுத்து

(கிளிநொச்சி)

"யுத்த நிறுத்த விதிமுறைகள் மற்றும் அரசாங்கம் உறுதி அளித்த நல்லெண்ண நடவடிக்கைகள் பூரணமாக நிறைவு செய்யப்பட்டு தமிழர் தாயகத்தின் இயல்பு நிலை தோற்றுவிக்கப்படுவதோடு விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்பே பேச்சுவார்த்தைக்கு வர இணக்கம் தெரிவிக்கப்படும்."என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல்கீசன் தலைமையிலான தூதுக் குழுவிடம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விடர்ஹெல்கீசன், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், நோர்வே வெளியுறவு அதிகாரி சகிதம் விமானப் படையின் விசேட ஹெலிஹொப்டரில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினார்கள். விசேட ஹெலிகளில் வந்திறங்கிய நோர்வேயின் உயர் மட்டத் தூதுக் குழுவினரை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தங்கன், புலித்தேவன் ஆகியோர் வரவேற்று பேச்சுவார்த்தை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகளின் சார்பில் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,

(10ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஹெல்கீசனிற்கு பிரபா பதக்கம் வழங்கினார்

(கிளிநொச்சி)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசனிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் "நினைவுப் பதக்கம்" ஒன்றை நேற்று கிளிநொச்சியில் வைத்து வழங்கிக் கௌரவித்துள்ளார்.

"இந்தச் நினைவுச் சின்னத்தில்" தமிழர் தலைகளும் விடுதலைப் புலிகளின் சின்னமும்" பொறிக்கப்பட்டுள்ளது.

நோர்வே தூதுக்குழுவினரிற்கு தலைவர் பிரபாகரன் மதிய உணவு வழங்கிக் கௌரவித்துள்ளார். (வ)

அன்பு வாசகர்களே!
வலம்புரியின் வாரமலர்
சங்கு நாதத்தை
இன்றைய நாளிதழுடன்
கேட்டு வாங்குங்கள்
*விலை:- 14.00*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்டால் தமிழரின் தேசியபலம் ஒடுக்கப்படும்

## பொங்குதமிழ்நிகழ்வில் சிவாஜிலிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

எமது இனத்தின் தாயகபூமி வடக்குகிழக்குப்பகுதி ஆகும் எந்தஒரு சிங்களஅட்சியினராலும்அதனைச்சின்னாபின்னப் படுத்திவிட முடியாது இது காலமும் சிங்களஅரசு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினால் தான் இலங்கை குருதியில் தோய்ந்தது.

இவ்வாறு நேற்று நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வில் உரையாற்றிய தமிழர்விடுதலைக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் பேச்சுவார்த்தையை விரும்புவது பலவீனத்தினால் அல்ல. அதேபோன்று கடந்த வருடம் செப்ரம்பர் 11ந்திகதி அமெரிக்கத்தாக்குதலின் எதிரொலியுமல்ல புலிகள் இயக்கம் செப்ரம்பர் மாதத்திற்கு முன்னரே ஒருதலைப்பட்சயுத்தநிறுத்தத்தினை மேற்கொண்டிருந்தது.

ஆனால் அகங்காரம் படைத்த இனவாத அரசான சந்திரிகாஅரசு அந்த சமாதான சமிஞ்ஞையை நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ளவில்லை இதனால்தான் ஆனையிறவையும் அரசு இழந்தது அடுத்துநடைபெற்ற கட்டுநாயக்கா தாக்குதலுடன்தான் சந்திரிகா அரசு ஆட்டம்கண்டது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை புலிகளே அவர்களின் காவல் தெய்வங்கள் புலிகள் ஒடுக்கப்பட்டால் தமிழ்மக்களின் தேசியபலம் உலக அரங்கில் ஒடுக்கப்பட்டதற்கு சமனாகும்

மாறிமாறி ஆட்சிபீடமேறிய சிங்கள இனவாதிகள் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளவில்லை மாறாக வடக்குகிழக்கைத் துண்டாடும் முகமாக வடக்குகிழக்கின் நுளை வாயிலான மணலாற்றிலே வெலிஓயா என்ற பெயரில் சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கினர். ஆனால் தமிழ் மக்களின் ஐக்கியத்தை எந்த ஒரு சிங்களஅரசாலும் பிரித்துவிடமுடியவில்லை.

எமது அபிலாசைகளையும் உரிமைகளையும் பெற எமது முன்னோர்கள் அகிம்சைவழியிலே போராட்டம் நடத்தினர் ஆனால் அந்த இரத்தம் சிந்தாத அகிம்சைப் போராட்டங்களெல்லாம் ஆயுத முனையிலே மிருகத்தனமாக அடக்கப்பட்டது. அதன்பின்னர்தான் தமிழ்இளைஞர்களின் கைகளிலே ஆயுதம் ஏறியது.

20வருட ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் சிங்கள அரசைப் பணியவைக்க முடிந்தது சிங்களஅரசு தமிழ் மக்களின் விடுதலைத் தாகத்தைப் புரிந்து கொண்டது. இராணுவரீதியிலே புலிகளை வெல்லமுடியாது என்றநிலையில்தான் அரசு தற்பொழுது சமாதானமுயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இவ்வளவு போராட்டங்களுக்கும் இழப்புக்களுக்கும் ஒருதேசிய உணர்வைப் பிரதியலிக்கும் உண்மையான தீர்வைத்தான் விரும்புகின்றார்கள் தமிழ்மக்களின்மேல் எந்தஒரு அரைகுறைத் தீர்வையும் திணிக்க முடியாது.

சந்திரிகாஅரசின் தூரநோக்கற்ற அரசியலால் தான்பெருமளவு இராணுவ வீரர்கள் இறந்ததுடன் பொருளாதாரத்திலே பெரும்வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது ரணில் விக்கிரம சிங்கா தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே தற்பொழுது தூரத்தே தெரியும் சமாதான ஒளிக்கீற்று தமிழ்மக்களின் கடந்தகால காயங்களை ஆற்றி நிலையான சமாதானத்தைத்தர வேண்டுமென்பதே மக்களின் நீண்டகால ஆவலாகும் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (இ-19)

## காப்புவரி ஆலோசனை சபை தலைவராக கே. சண்முகலிங்கம்

(கொழும்பு)

முன்னாள் திறைசேரிபிரதி செயலாளராக ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் பதவி வகித்தவரான கே.சண்முகலிங்கம் நிதியமைச்சர் கே என் சொக்ஸியினால் காப்புவரி ஆலோசனைச் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா காலத்தில் நிதியமைச்சில் பிர்திப்பணிப்பாளராக பணியாற்றியவர். லண்டன் பல்கலைக்கழ்கத்தின் பொருளியல் பட்டதாரியான இவர் 18வருடங்களாக உலகவங்கி சர்வதேசநாணயநிதியம் ஆகியவற்றின் மாநாடுகளில் பங்குபற்றியவராவர் (எ)

## பர்த்தியில் குதித்தது தெய்வம்

வைகுண்டம் விட்டிங்கு வானுறையும் தெய்வம்
மெய்கண்ட வழியில் மேதினி முழுமையும்
உய்க்கொண்டு போவதற் குதித்தது பர்த்தியில்
கைகண்ட மருந்தாகும் கலியினுக்கு 'அவன்'கைநீறே

தரங்கெட்ட மானிடத்தை தயையாலே சீர்ப்படுத்தி
வரம்பெற்ற வாழ்வினில் வழிகாட்டி உய்விக்க
பரம்பொருளே உருவெடுத்துப் பர்த்தி தலம் வந்து
கரம்பற்றி ஏகிடுவார் காலத்தி னிறுதிவரை

பாலிற்படுநெய்யாக பரந்துள பரம்பொருளே
காலிற்படு மூலிகையாய் கருணையாற் புவிகாத்து
மாலிற்படு மனத்தராய் மானிடம் திருத்த
ஆலிலையான் வந்தான் அருளாலே பர்த்தியிலே

இ. சுதாகரன்

## கிளிநொச்சியில் சம்போ நட்புநிலையம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் 'சம்போ நட்பு நிலையம்' ஒன்றை நிறுவுவது குறித்து ஆராய தென்பகுதியில் இருந்து சம்போநிறுவனத்தைச் சேர்ந்த பத்துப்பேர் கொண்ட குழுவினர் வன்னி செல்லவுள்ளனர்.

15ஆயிரம் சதுர அடிப் பரப்பில் நிறுவப்படும் இக் கட்டிடத்தில் விளையாட்டு மைதானம் கல்விப்பரிவெனா மற்றும் தியான மண்டபம் என்பன அமைக்கப்படவுள்ளது. (இ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டுக்குளி புனிதயுவானியார் பங்கிலுள்ள மரியாயின்சேனை சிருஷ்டிமாதா பிரசீடியத்தின் தலைவராக சகோதரர் எஸ். தேவசகாயம் (பொலிஸ் உத்தியோகத்தர்) உபதலைவராக சகோதரர் க. செபஸ்தியாம்பிள்ளை (அதிபர் நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்) ஆகியோர் கடந்த கொமிசியக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

## கைதிகளின் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

களுத்துறைச்சிறைச் சாலையில் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் கைதிகளில் சிலரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

கைதிகள் சிலர் இரத்த வாந்தி எடுப்பதுடன் மயக்கமடைந்த நிலையிலுமுள்ளனர். (செ)

## இந்து ஆலயங்களின் விபரங்கள் திரட்டல்

(காரைநகர்)

பிரதேச ரீதியான இந்து ஆலயங்களின் விபரங்கள்திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையின் அனைத்து இந்து ஆலயங்களின் விபரங்களையும் திரட்டி ஒருநூல் வடிவில் வெளியிடும் நடவடிக்கையாகவே இந்துகலாசார அமைச்சர் இம் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

ஆலயங்களின் பெயர் விபரம் ஆலயத் தர்மகர்த்தா பிரதான குருக்கள் போன்றோரின் பெயர் முகவரிகள் ஆலயம்சம்மந்தமான விசேட குறிப்புகள், ஆலயம் அமைந்த கிராமசேவகர் பிரிவு ஆலயத்தின் பதிவு பற்றிய விபரம் உள்ளடக்கப் பட்டு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களால் இவ் விபரம் திரட்டப்படுகிறது. (உ 246)

## 100நாள்திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறையில் அரைநிரந்தரவீடுகள்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர்பிரிவில் 20 அரைநிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அரசின்100நாள் வேலைத் திட்டத்தில் வடக்கின் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுகீட்டின் கீழ்இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

காரைநகர் பகுதியில் தெற்கு மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் இருந்து நீண்டகாலமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமராதவர்களிற்கே இவ்வாறான அரைநிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. (உ-246)

## சட்டவிரோத பாவனையில் 32 வாகனங்கள்

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சின் முன்னாள் செயலாளர்சிறில் குணபால கடந்ததேர்தலுக்கு முன் 32 வாகனங்களை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு சட்டவிரோதமாக வழங்கியதற்காகக் கைதுசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி வாகனங்கள் மடவளை, அங்குரான்கத்த, ஹேவாகத்த, குண்டசாலை ஆகிய இடங்களில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் கொலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

சமுர்த்தி அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றிருந்த காலத்தில், அமைச்சின் செயலாளராகவிருந்த குணபால இவ்வாகனங்களை கையளித்திருந்தார். மேலும் இவ்வாகனங்கள் அவற்றின் சாரதிகள் இல்லாமலே வழங்கப்பட்டுள்ளன. இதுவும்சட்டவிதிகளின்படி குற்றமாகும். மேற்படி 32 வாகனங்களில் 11வாகனங்கள் இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளன. (எ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடத்தவுள்ளமறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளும்வகையில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும்காலை 7.00 மணிக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் பணிமனைக்குமுன்பாக சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

## அமெரிக்க வீரன் லண்டனில் உலக சாதனை

(லண்டன்)

லண்டனில் இடம் பெற்ற 22 ஆவதுலண்டன் மரதனோட்டப்போட்டியில் அமெரிக்க வீரர் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளதுடன், புதிய உலக சாதனை ஒன்றையும் நிலை நாட்டியுள்ளார்.

ஓட்டவீரன் காலிவ் நொலேச்சி 2 மணித்தியாலம் 5 நிமிடம், 38 செக்கனில் 26.2 மைல் தூரத்தை ஓடி முடித்துள்ளார்.

கடந்த காலங்களில் 2 மணித்தியாலம் 5 நிமிடம் 48 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பளைப்பிரதேச செயலக தடகள விளையாட்டு இறுதி போட்டிஇன்றும்நாளையும்

(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையிலான தடகள விளையாட்டு இறுதிப் போட்டிகள் இன்றும்நாளையும் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய விளையாட்டரங்கில் மு.ப 10 மணி முதல் நடைபெறவுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இ. ஐயாத்துரை முதன்மை விருந்தினராகவும். யாழ் செயலக உதவித் திட்டபணிப்பாளர் வே. வீரபத்திரப்பிள்ளை யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி திருமதி ஏ.எவ் ரூபசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் க. நவரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வலிகாமத்தில் தங்கியுள்ள பச்சிலைப்பள்ளி விளையாட்டுக்கழக அங்கத்தவர்களை காலை 9 மணிக்கு முன்னர் நிகழ்விற்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## புலிகள் மீதான தடை சமாதான பேச்சுக்கு முட்டுக்கட்டையாகாது

### ஜனாதிபதி இவ்வாறு கருதுகிறாராம்

சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு புலிகள் மீதான தடை ஒருமுட்டுக்கட்டையாக அமையாது என்றுஜனாதிபதி கருதுவதாக அவரது பேச்சாளர் ஹரின் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஊடகவியலாளர் மாநாடு சமாதான நடவடிக்கைளுக்குமுன்னேற்றம்அளிப்பதாக அமைந்துள்ளது. என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாக அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்கு முன் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று அவர்கள் கோரியதை விரிவாக ஆராய்ந்த பின்னரே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஜனாதிபதிகருதுவதாகவும்,

சமாதான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை தெரிவிக்கும் கடிதமொன்றையும் அவர் பிரதமருக்கு அனுப்பியுள்ளதாகவும் பேச்சாளர் மேலும்தெரிவித்துள்ளார். (உ-9)

## கொழும்பு தேசிய வைத்தியசாலை

# வைத்தியர்களின் போராட்டத்திற்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகுகிறது

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியர்கள் கடந்த இருநாள்களாக மேற்கொண்டுவரும் பொதுவேலை நிறுத்தம் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் பரவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள் அனைவரும், வைத்தியசாலைக்கருகிலுள்ள நடைபாதை கடைகளை அகற்றுதல், வைத்தியசாலையில்நோயாளியால்தாக்கப்பட்ட வைத்தியருக்குநட்டஈடு வழங்கல், வைத்தியசாலைக்குபொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்கச் செய்தல் போன்ற கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டுபொதுவேலை நிறுத்நத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காசல் வீதி மகப்பேற்று வைத்தியநிலையம், டிசோஷா மகப்பேற்று மருத்துவ நிலையம், கலுபோவில, இராகம போன்றவைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களும் நேற்று முன் தினம் தொடக்கம்இதற்குஆதரவாக பொதுவேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

வைத்தியர்களின் பொது வேலை நிறுத்தம் காரணமாக ஆயிரக் கணக்கான நோயாளர்கள்பாதிக்கப்படுவதுடன், தனியார் வைத்தியசாலைகளினை நாட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## உறிமரம் முறிந்ததில் நான்கு பேர் காயம்

(காரைநகர்)

காரைநகர் சிதம்பரா மூர்த்தி சேணியடி வைரவர் ஆலயத்தில் உறியடி உற்சவத்திற்காக கட்டப்பட்டிருந்த மரம் முறந்து வீழ்ந்ததில் அவ்வாலயக்குருக்களும் மூன்று அடியார்களும் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; மேற்படி ஆலயத்தில் உறியடி உற்சவம் நிறைவுற்ற பின்னர் உறிகட்டப்பட்டிருந்த மரத்தில் அடியார்கள் ஏற முற்பட்ட பொழுதே அது முறிந்துவீழ்ந்துள்ளது. (செ-246)

## ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசிய கட்சியிடம் அன்றேல்நிதிஒதுக்கீடில்லை

(கொழும்பு)

மத்தியமாகாண சபையின் ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசிய முன்னணியிடம் கையளிக்கப்படாவிட்டால் அந்த சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப் போவதில்லையென உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணசபை, ஐக்கிய தேசிய முன்னணியிடம் கையளிக்கப்படும் அன்றைய தினமே அந்த சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பெரும்பான்மைப் பலத்தை இழந்த நிலையில் மத்திய மாகாண சபையை பொதுஜன ஐக்கிய முன்னணி தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சேவையை முடிவுறுத்துவது நியாயமற்ற செயலாகும் அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பில் இளைப்பாறும்திட்டத்திற்குச்சம்மதம் தெரிவிக்காத ஊழியர்களின் சேவையை முடிவுறுத்த லங்காசீமெந்து லிமிட்ரெட் முகாமைத்துவம் மேற்கொள்ளும் நடவடிக்கை நியாயமற்றதாகும்.

இவ்வாறு வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரோகித போகொல்லகவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

லங்காசீமெந்து லிமிட்ரெட் தொழிலாளர்களுக்கு முன் வைக்கப்பட்ட சுயவிருப்பில் இளைப்பாறும் திட்டத்திற்கு சம்மதம் தெரிவிக்காத 72 தொழிலாளர்களுக்கு அவர்களின் சேவையை முடிவுறுத்தும் கடிதங்கள் இப்போது கிடைத்து வருவதாக அமைச்சருக்கு அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இப்போது உருவாகி வருகின்ற அமைதிச் சூழல் தொழிற்சாலைகள் புனரமைக்கப்பட்டு இயங்கச் செய்வதற்கான சூழலை ஏற்படுத்தும்என்று எதிர்பார்க்கின்ற தருணத்தில் இத்தகைய ஒரு நிலைக்குத் தள்ளப்படுவதுஆரோக்கியமானதல்ல

எனவே இவ்விடயத்தில் தாங்கள் நேரடியாகத் தலையிட்டு ஒரு தீர்வைக் காணுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (எ)

## நூறுநாள் அபி. திட்டம் அதிக பயனை ஈட்டியுள்ளது தொடர்பாடல் அமைச்சர்

(கொழும்பு)

ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நூறு நாள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், மக்கள் தொடர்பாடல் அமைச்சு அதிக பலாபலன்களை பெற்றுள்ளது என அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகத்துறையினருடன் அரசதுறை ஊடகங்கள் போட்டியிடுவதற்கான ஊடகக்கொள்கைக்கு இது அடித்தளம் இட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கான திட்டங்களை மேற்கொள்ளுதல், தனியார் ஊடகத்துறையினர் தமது தொழில் நுட்பத்தை விருத்திசெய்யும் நோக்குடன் அரசாங்க அனுசரணையை வழங்கல் உள்ளூராட்சித் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் தேசிய அச்சுத்தொழில் உருவாக்கப்பட்டமை, உள்ளூரில் முத்திரைகளை அச்சிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நகர்ப்புறங்களில் இதுவரை காலமும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த முகவர் தபால் சேவை கிராமபுறங்களிற்கும் பெருந்தோட்டத்துறைகளிற்கும் விஸ்தரிக்கப்பட்டமை என்பன இத்திட்டத்தின் மூலம் ஊடகத்துறை பெற்ற நன்மைகள்.

இவ்வாறானதிட்டங்களினை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வதன்மூலம் ஊடகத்துறைபோன்ற வேறு துறைகளும் முன்னேற்றம் அடைய முடியும்எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இனந்தெரியாதோர் அட்டகாசம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை, வேலணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டிருந்த புலிகளை வரவேற்கும், பொங்குதமிழ் பதாகைகள் சிவப்பு மஞ்சள் கொடிகள் கடந்த திங்கள் முன்னிரவு இனந்தெரியாதோரால் அறுத்து அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

புளியங்கூடல் சின்னமடு பகுதியில் இருந்த 7 அடி உயரமான தலைவர்பிரபாகரனின் கட்டவுட் ஒன்றும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. (எ-75)

## மாதாந்தக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயசம்மேளங்களிற்கான மாதாந்தகூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ-246)

## மணவாளக் கோலமும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை மணவாளக் கோலமும் 1008 சங்காபிஷேகமும், மாலை விசேட பூசையும் திரு ஊஞ்சலும் நடைபெற்று சுவாமி வீதியுலா வரும்நிகழ்வும் இடம்பெறும். (செ)

## போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறை பிரதேசத்தில் கம்மலுவத்தை தோட்டத்தில் 43 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாலத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம்இருந்து 2 ஆயிரத்து 586கிறாம்நிறையுடைய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## சமாதானம் நிலைபெற உடுவில் இளைஞன் புதுவகை பங்களிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து தலைமன்னார் வரையான தூரத்தை நீந்திக் கடத்து சாதனை படைக்க இளைஞர் ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளார்.

உடுவில் இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த குலநாயகம் ரகுநாத் என்பவரே நீந்துவதற்கு அனுமதி கோரியவராவார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகள் வெற்றி பெற, தெய்வ ஆசிவேண்டியும் நெடுந்தீவுக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கடல்வழிப்போக்குவரத்தினை ஆரம்பிக்க வேண்டியதை வலியுறுத்தியுமே, இந்நீச்சல் முயற்சியில் ஈடுபட விரும்புவதாக பிரஸ்தாப இளைஞர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தாண்டு நிகழ்வில் கலந்துகொள்ள யாழ். வந்த புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் மேற்படி இளைஞர் தனது விருப்பத்தை தெரிவித்து, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

இளைஞனின் முயற்சியை பாராட்டிய அமைச்சர், விரைவில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். (இ)

## கூடாரம் இல்லாத படகு சேவையில்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் தீவுப்பகுதிக்கான படகுச் சேவையில் கூடாரம் இல்லாத படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது.

அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, ஆகியஇடங்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் படகே கூடாரம் இல்லாத நிலையில் சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இப்படகில் கூடாரம் இல்லாமையினால் குழந்தைகள் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பிரயாணம் செய்யும் போது வெய்யில் மற்றும்மழை நேரங்களில் பெரும் துன்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-75)

## 12 தொழிற்சங்கங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஆதரித்துத் தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைஆதரிப்பதற்கான தீர்மானமொன்றில் 12 தொழிற்சங்கங்களின் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

சர்வதேச தொழில்ஸ்தாபனப் பணிப்பாளர் குளோரிகூல் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சர்வதேச தொழில்ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் தொழிற்சங்கங்களும் கல்வி ஆய்வுநிறுவனமும் இணைந்து இத் தீர்மானத்தைக் கொழும்பில் நிறைவேற்றியுள்ளன.

14 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், இலங்கைச் சுயாதீன தொழிலாளர் சங்கம், தேசிய தொழிலாளர் சங்கம், கூட்டுறவு மொத்த விற்பனைநிலைய ஊழியர் தொழிற்சங்கம், அரசாங்க சேவை ஐக்கிய பாதுகாவலர் சங்கம், இலங்கைதொழிற்சம்மேளனம் இலங்கை வர்த்தகர் தொழிற்சங்கம், ஆகியனவும் இத்தீர்மானத்தில் கைச்சாத்திட்டுள்ளன. (உ-8)

## விஸ்வஹிந்து கிளைகள் இலங்கையில் அமைப்பு

(கொழும்பு)

தமிழ் பேசும் இந்துக்கள் மத்தியில்ஐக்கியத்தை வளர்க்கும் நோக்குடன்விஸ்வஹிந்து பரிஷத் இலங்கையில் கிளைகளை அமைத்து வருகிறது.

இலங்கையிலுள்ள இந்துக்கள் பல கூறுகளாகச் சிதைவடைந்துள்ளனர். ஆதலால் அவர்களை ஒன்று திரட்டும் பணியில் தான் கிளைகளை அமைத்து வருவதாக புதுடில்லியிலிருந்து வருகைதந்திருக்கும் இவ் அமைப்பைச்சேர்ந்த சுவாமி வித்தியானந்தா தெரிவித்துள்ளார்.

ஒரு மாதமாக இலங்கையில் தங்கியிருக்கும் சுவாமிகள் திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படும் இந்துசமய பாடசாலையொன்றை ஆரம்பித்து வைத்துள்ளார். (எ)

## துணி வகைகளை நெசவாலைகளில் இருந்து பெறுவதற்கு திட்டம்

(கொழும்பு)

வைத்தியசாலைகளுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும் தேவையான துணிவகைகளை கைத்தறி நெசவாலைகளில் இருந்து பெறும் திட்டத்தை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

பன்டேஜ்துணிகள் ஏனைய துணிவகைகள் உற்பத்தியை கைத் தொழில் நெசவாலைகளில் மேற் கொள்வதாகவும் இத்திட்டத்தின் மூலம் கைத் தொழில் ஆலைகளின் வருமானம் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளவும் ஏற்கனவே வேலை செய்வோரை நிரந்தரமாகவேலையில் இணைத்துக் கொள்ளவும் முடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ, 5)



# யாழ்ப்பாண மண்ணில் பே

# பொங்கு தமிழ்



யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தின் நுழைவாயில்




பொங்குதமிழ் உணர்ச்சிப் பூரிப்பில்...





ஈகைச் சுடர் ஏற்றப்படுகிறது...









வானை முட்டும் பொ
கோஷங்கள்...

படங்கள்:-
கோபி, துஷ்யந்தன், திருநீபன்



தமிழீழத் தாகத்துடன் தலைவர் பிரபாவின் படத்தை ஏந்தியவாறு காணப்படும் மக்கள் சமுத்திரம்

# ...ற்று நடந்த எழுச்சி மிகு ...க் காட்சிகள்





...பல்கலைக்கழக
...னவர் ஒன்றியத்
...லைவர் கஜேந்திரன்



மட்டு பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியத்
தலைவர்



கவிஞர் புதுவை இரத்தினதுரை



மகளிர் படை அரசியற் துறைப்
பொறுப்பாளர் தமிழினி






துணை வேந்தர்கள் உரையாற்றுகிறார்கள்...

...ங்கு தமிழ்க்



அரசியற் பிரமுகர்கள் உரை...



மனிதநேய
அமைப்பின் பிரதிநிதி
உரை



# 12 மில்லியன் தொழிலாளர் இத்தாலியில் வேலை நிறுத்தம்

## இயல்பு வாழ்வு ஸ்தம்பிதம்

(ரோம்)

இத்தாலியில் சுமார் 12 மில்லியன் மக்கள் வேலை நிறுத்தம்"ஒன்றை நேற்றுமுன் தினம் ஆரம்பித்துள்ளனர்.

இதனால் தொழில் நிறுவனங்கள் மற்றும்பஸ்போக்குவரத்துகள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

தொழிற் சட்டத்தில் சர்ச்சைக்குரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதை எதிர்த்தே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொழிற் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் நிராகரிக்கப்பட்டு பழைய சட்டங்கள்அமுலுக்கு வரும் வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (உ-7)

# இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்புவதற்கு தி. மு. க. கடும் எதிர்ப்பு

(சென்னை)

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனைக் கைது செய்ய இந்தியப்படையினரை அனுப்ப வேண்டும் என்னும் தீர்மானத்திற்குதிராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி கடும்எதிர்ப்புத் தெவித்துள்ளார்.

தமிழக அரசின் இத்தகைய செயற்பாடு இலங்கையில் நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ(

# சர்வதேச விசாரணையாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப அனானிடம் வலியுறுத்து

பலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேலியப் படைகள் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேச விசாரணையாளர்களை அனுப்பி வைக்குமாறு இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பலஸ்தீனப் பகுதிகளில் உள்ள இல்லங்கள், நிறுவனங்கள், கலாசார நிலையங்கள், வங்கிகள் ஆகியவற்றில் இஸ்ரேலியர்கள் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதுடன்,

மேற்கு கரைப்பகுதிகளில் படையொன்றை கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று அனான் தெரிவித்த யோசனைக்கு அக்கடிதம் மூலம் நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# உலக தரிசனம்

# முற்றுகைப் போர் முடிவுக்கு வர சர்வதேச அழுத்தம் அவசியம்

## மலேசிய வெளிவிவகார அமைச்சர்

(ஜெருசலம்)

மத்திய கிழக்கு பிரதேசத்தில் இஸ்ரேலியர்கள் நடத்தும் முற்றுகைப் போரை நிறுத்துமாறுசர்வதேச சமூகம் இஸ்ரேலை பல வந்தப்படுத்த வேண்டும் என்று மலேசிய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மீது சர்வதேச சமூகம் திடமான நடவடிக்கையை எடுக்காவிட்டால், பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர் மீது நடத்தப்படும் தற்கொலை,குண்டுத்தாக்குதல்களை நிறுத்த மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதமளவில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ள மலேசியப் பிரதமர் பலஸ்தீன பிரதேசங்களில் ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலியர்களின் ஒடுக்கு முறை தொடர்பாகவும் அங்கு உரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

# மேற்காசிய அமைதி மாநாட்டுக்கு அரபாத் ஆதரவு

(ஜெருசலேம்)

மேற்காசிய அமைதிமாநாடு நடத்த வேண்டும் என்ற இஸ்ரேலின் யோசனையை அமெரிக்கா ஆதரித்தால் அதனை தான் ஏற்கத் தயார் என பலஸ்தீன தலைவர்யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவிற்கான சவுதி அரேபியாவின் சமாதான திட்டத்தை விவாதிப்பதற்கு, பிராந்திய மாநாட்டை நடத்தலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் தம்மிடம் யோசனை தெரிவித்தார் என இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், மேற்குக் கரையிலுள்ள படைகளைவிலக்கிக் கொள்வதற்கான எவ்வித தீர்மானத்தையும் அவர் வெளியிடவில்லை எனவும் தெரிவித்துள்ளார் (உ-8)

# அமெரிக்காவில் வசிக்கும் பெனாசீர் பூட்டோ மீண்டும் நாடு திரும்பி அரசியலில் ஈடுபடுவார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோஅமெரிக்காவிலிருந்து நாடு திரும்பி, நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

பாகிஸ்தானில்இருந்துவெளிவரும்''டாண்'' என்ற பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானின் 3 ஆவது பிரதமர் ஆகும் நிலையை தடுப்பது தொடர்பான சட்டத்தை அந்நாட்டரசு திட்டமிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தவாரமளவில் அதிபர் பெர்வேஷ்முஷாரப்பினால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புவாக்கெடுப்பின்மூலம் ஐந்துவருடத்துக்கு ஆட்சியை நீடிக்க எடுத்துள்ள நடவடிக்கையானது மிகத்தவறானது எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலின் போது போட்டியிடுவது உறுதியான தொன்று என்றும், இதனால் சிறைக்கு அனுப்பப்பட்டாலும் தான் கவலைப்படப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# மரதன் ஓட்டத்தில் சாதனை நிலை நாட்டிய 90 வயது மூதாட்டி

(லண்டன்)

லண்டனில் இடம் பெற்ற 22 வது மரதன்ஓட்ட நிகழ்வில் 90 வயது மூதாட்டி கலந்து கொண்டு இறுதி இலக்கை எட்டியுள்ளார்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜெனிவோஸ் கெலன் என்ற இந்த மூதாட்டி 48 கிலோ மீற்றர் நீளத்தை முழுமையாக ஓடி முடித்துள்ளார்.

அதிக தூரம் ஓடி முடித்த உலகிலே மிகவும் வயது கூடிய மூதாட்டி இவரே என்ற சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இதற்கிடையில் இம் மூதாட்டி 16 தடவைகள் லண்டனில் மரதனோட்டங்களில் கலந்து கொண்டுள்ளார்.

71வயதிலிருந்துதனது மரதனோட்டங்களை ஆரம்பித்த மூதாட்டி 48 கிலோ மீற்றர் தூரத்தை 11.00 மணித்தியாலங்களில் ஓடி முடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மூதாட்டி கெலன் இந்த ஓட்டப்போட்டியில் கடைசியாக ஓடினார் என்ற சொல் இருக்கக் கூடாதென அவரது நண்பர்கள் இருவர் அவரை பின் தொடர்ந்து வந்துள்ளனர். (உ-7)

# அமெரிக்க அரிசோனா மாநிலத்தில் இரகசிய சுரங்கம் கண்டுபிடிப்பு

(குவாட்டலிஜறா)

மெக்ஸிக்கோவிலிருந்துஅமெரிக்காவை நோக்கி 85 அடி நீளமாக அமைக்கப்பட்ட இரகசிய சுரங்கப்பாதை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அரிசோனா மாநிலத்திலுள்ள அமெரிக்க சுங்கச் சேவை வாகனத் தரிப்பிடத்திற்கு கீழாகவே இந்தசுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோவிலிருந்தும் அதனை அண்டிய நாடுகளிலிருந்தும் அமெரிக்காவுக்கு போதைப்பொருள்களை கடத்தும் நோக்குடன் இந்தப் பாதை அமைக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க சுங்கச்சேவை வாகனத் தரிப்பிடத்தில் ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க பாதுகாப்பு ஊழியர்களே கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இரகசிய சுரங்கப் பாதையை கண்டு பிடித்துள்ளனர்.

இவ்விரகசியப் பாதையினை யார், எக்காலம் தொடக்கம் அகழ ஆரம்பித்தனர் போன்ற விபரங்கள் இன்னும்வெளிவரவில்லை என அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

# கண்ணிவெடியில் மூவர்பலி 27 பேர் படுகாயம்

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் 3 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகருக்கு தெற்கே இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்துக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை. இதேவேளை இன்னொரு கிரனெட்வீச்சு சம்பவத்தில் மேலும் 3 பேர் காயமடைந்தனர். (த)

# முற்றுகைக்குள் இருக்கும் அரபாத்தை சந்தித்து கொலின்பவல் பேச்சு

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதி வழியிலான தீர்வைக் காணும் பொருட்டு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் ரமழா நகரில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டிருக்கும் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீன பகுதிகளில் இருந்து வாபஸ் பெறப்படவேண்டுமென அரபாத் வலியுறுத்தினார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படவேண்டுமாயின் இஸ்ரேல் மீதான தற்கொலைத் தாக்குதல்களை யசீர் அரபாத் கட்டுப்படுத்தியே ஆகவேண்டுமென கொலின்பவல் வலியுறுத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்ததென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிய இராணுவத்தினரால் சல்லடை போடப்பட்ட ரமழா அலுவலகத்தினுள் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் கடந்த இரண்டு வார காலமாக மின்சார வசதியோ தண்ணீர் வசதியோ அற்ற நிலையில் சிறைக் கைதியைப் போன்று இருப்பதாக அங்கு சென்ற அமெரிக்க செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

ரமழா நகரின் கட்டடங்கள் அனைத்தும் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடை போடப்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதிகள் சுடுகாடு போல் காட்சி தருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# மலேசியப் பூங்காவில் அகிப் மலர் செடிகளை திருடிய ஜப்பானியர் கைது

(கோலாலம்பூர்)

மலேசியாவின் பூங்காவொன்றிலிருந்து அகிப் மலர் செடிகளை களவாடிய 6ஜப்பானியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலகப் புகழ் பெற்ற புளூ தேசிய பூங்காவிலிருந்து 31 வகையான அகிப் மலர்ச்செடிகளை இந்தஆறு பேரும் களவாடி வைத்திருந்தனர். (உ-8

## இன்று ஒரு தகவல்

# மரணத்துக்கு அஞ்சாது தர்மத்தைக் காத்திடுக

எந்த அரசாங்கத்தில் குடிகள் தங்களுடைய உடலைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பொதுவுடைமையாகக் கருதிக் கொண்டு அதன்படி வாழ்க்கையை நடத்துகின்றார்களோ, அந்த நாட்டில் வழக்குகள் - விசாரணைகள் ஒன்றுமே இரா. ஆன்மா அமரன். அவனை எவராலும் கொல்லவோ, அழிக்கவோ இயலாது. நாம் எதை இழந்து விட்டாலும் கௌரவத்தை இழக்க இடம் தரக்கூடாது நற்குணங்களை நான் ஞானம் என்று சொல்வேன்.

எவரும் வேண்டுமென்றே தவறு செய்வதில்லை. எது உண்மையிலேயே சரிஎன்பதை அவர் அறியவில்லையாகையால் அவர்தம் மனத்தில் நல்லது எனக் கருதுவதையே செய்கிறார். இயற்கையாக மனிதனுக்கு இருகண்களும் இரு காதுகளும் கொடுத்த இறைவன், நாக்கை மட்டும் ஒன்றாகக் கொடுத்திருப்பதன் காரணம் பேசுவதைவிடப் பார்ப்பதும், கேட்பதும் தான் அதிகம் இருக்கவேண்டும் என்பதே.

வியப்பு, தத்துவ ஞானிகளின் உணர்வு, தத்துவ ஞானம், வியப்பிலிருந்து தான் உருவாகிறது. நடத்தை என்பது ஒரு கண்ணாடி, அதில் ஒவ்வொருவரும் தனது பிம்பத்தைக்காட்டுகிறார்கள். இயற்கை தெய்வாம்சமாக உலகில் பரவியிருப்பதையும் அதன்மீது மனித வர்க்கம் வைத்துள்ள நம்பிக்கையையும் கொண்டு மட்டும் இன்றி, கனவுகள், அசரீரி வாக்குகள், சூசகங்கள் இவை மூலம் ஏற்படும் எச்சரிக்கைகளால் கடவுள் இருப்பதைக் காண முடிகிறது. குற்றமற்றவற்றை- ஒன்றுமறியாதவரை - நிராகரித்துக் கண்டிப்பது எவ்வளவு வெட்கக் கேடான காரியம்? நியாயத்துக்காகவும், தர்மத்துக்காகவும் பொதுஜன அபிப்பிராயத்தையும் எதிர்த்து நிற்கத் தயாராக வேண்டும். தேவைகள் குறையும் அளவுக்கே தெய்வத்தன்மைஅடைவோம்.

இளமைப் பருவத்தில் ஓர் எண்ணம் மனத்தைக்கவர்ந்து விட்டால் அதனின்றும் மாறுவது அரிது! குதிரைக் குட்டியை சவாரிக்கும், மாட்டை வண்டிக்கும் பழக்கச் சாரதிகள் எளிதிற் கிடைப்பர். ஆனால் மனித உரிமை, தேசத்தை ஆண்டுவருபவர்களின் கடமை முதலியவற்றைச் சாதிப்பதற்கான திறமையையும், அறிவையும் வாலிபருக்குப் புகட்டி அவர்களை நல்ல வழியில் நிறுத்த வல்ல மேதாவிகளைக் காண்பது அரிது.

மனிதனாய்ப் பிறந்தவன் ஏதேனும் ஒரு காரியம் செய்யப்புகும்போது, அதுதர்மமா, அதர்மமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டுமேயொழிய அதனால் தன் பிராணனுக்கு ஆபத்து வருமா வராதா என்பதை எண்ணக்கூடாது. நற்செயலோ தீச்செயலோ தர்ம நெறியில் நிற்பவன் செய்யத் தகுந்த காரியமா, அல்லவா என்பதை மட்டுமே பார்க்க வேண்டும். அஞ்ஞானத்தைப் பூரண ஞானமாக நினைப்பதே உலகினருடைய பெருங் குற்றம். மரணத்தைக் கண்டு அஞ்சுவேனானால் நானும் அந்தப் பெருங்குற்றத்துக்கு ஆளாவேன். மரணத்தை நாம் ஏன் துன்பமாகக் கருதவேண்டும்? மரணத்தின் பின் ஆத்மாவுக்கு என்ன நேரும் என்பதை நாம் அறியாதிருக்க, ஏன் ஒரு பெரும் விபத்தாகக் கருதி அஞ்சவேண்டும்.

நான் மரணத்தை ஒரு துன்பமாக நினைக்கவில்லை. மரணத்தைக் கண்டு அஞ்சுவது அஞ்ஞானம். இறந்தபின்நான் எவ்விதம் ஆவேனோ அஃது எனக்குத் தெரியாது. ஆதலின் மரணத்தைக் கண்டு அஞ்சி நான் ஒரு காரியத்தைத் தொடங்கவோ விடவோ மாட்டேன். நோய்வாய்ப்படும் போதெல்லாம், மனநிலை மாறி மெய்யறிவு உண்டாவது தடைப்படுகின்றது. உடலுள்ள வரையில் காமம், வெகுளி, அச்சம், மயக்கம் இவைகளால் ஞானத்தை அடைவது தடைப்படுகிறது. உடலும் அதன் அளவும், ஆசையுமே எல்லாத் தீமைகளுக்கும், நிலையில்லாத பொருளைத் தேடுவதிலும், பகையிலும், சண்டையிலும் நாம் வீணே காலம் கழிப்பதற்குக் காரணம். ஞானமடைந்தவன் ஒவ்வொருவனும் இந்த உடலைவிட்டுப் போகவே விரும்புவான். ஆனால் பலவந்தமாய் உயிரை மாய்த்துக்கொள்ள மாட்டான். அது தவறாகும். நாமெல்லாரும் கடவுளின் பாதுகாப்பிலிருக்கிறோம். நாமெல்லாரும் அவருடைய சொத்து. நம்மை நாம் வதை செய்து கொள்ள நமக்குச் சுவாதீனம் கிடையாது. கடவுளே நமக்கு விடுதலை கொடுக்கும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும்.

சோக்ரட்டீஸ்

# நிகால் கருணாரட்ண மீது வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நிகால் கருணாரட்ணவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு தயாராகி வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

சமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் நவீன ரக ஆயுதங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள இவர் மீதுசுமத்தப்பட்டுள்ளது.

இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யும் பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப் பத்திரத்தை தயாரித்து வருகிறது.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நிகால் கருணாரட்ண உட்பட 14 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## நடமாடும் சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நடமாடும் சுகாதார சேவை, மாநகர முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் நாளை நாவாந்துறை 19 ஆம் வட்டாரத்தில் இடம்பெறவுள்ளது.

பொதுச் சுகாதாரம், சிரமதானம், சிறுவர் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள் அன்றைய தினம் இடம்பெறவுள்ளன. (உ-6-19)

## சிறைகளிலுள்ள கைதிகளின்

# வழக்குகளை விசாரணைசெய்வதற்கு விசேட குழுவொன்று அமைப்பு

(கொழும்பு)

பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளினது வழக்குகளை துரிதமாக விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குழுவை சட்டமா அதிபர் கமலசபேசன் நியமித்துள்ளார்.

வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ள நீதி மன்றங்களுக்குப் பொறுப்பான அரச சட்டத்தரணிகள் இந்தக் குழுவை அமைத்து சந்தேக நபர்கள் தொடர்பான கோவைகளைப் பரிசீலிக்குமென்று புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு சட்டமா அதிபர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சந்தேக நபர்கள் தொடர்பாகதகுந்தநிவாரணங்களை வழங்குவதற்கும் இந்த குழுவுக்கு சட்டமா அதிபர் அதிகாரம் வழங்கியுள்ளார். (த)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட கராத்தே சங்கக் கூட்டம் எதிர்வரும் 20ம் திகதி சனிக்கிழமை மு. ப 10.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-10)

## உ.கிழங்கு வருகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு 30 மெற்றிக்தொன் உருளைக் கிழங்கும் 500 மெற்றிக் தொன் சீமெந்தும்நேற்றுமுன் தினம்அனுப்பப்பட்டுள்ளதாக திருகோணமலைத் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலையில் இருந்து 'ஹெந்தல' என்ற சரக்குக்கப்பல் மூலம் இவை அனுப்பிவைக்கப் பட்டுள்ளன (உ-9)

## 29 வரை விளக்கமறியல்

(கொழும்பு)

உடத்தலவின்ன கொலைகளின் சந்தேக நபர்களான அனுருத்த ரத்வத்த மற்றும் அவர்களது இரு புதல்வர்களையும் இம் மாதம் 29 ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு இராணுவ வாகனங்களை செலுத்திச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட இரு இராணுவ சாரதிகள் நேற்று முன்தினம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இவர்களின் வாக்கு மூலங்களை பதிவு செய்த பின்பே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## வலைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவின் ஓரங்கமானவலைப் பந்தாட்டப் போட்டி, மென் பந்து கிரிக்கெட் போட்டி என்பன எதிர் வரும் 20ஆம் திகதிதொடக்கம், யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் காலை 8.00 மணி முதல் இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரிதிருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (உ-10-2)

## பயங்கரவாத சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மாத்தளையைச் சேர்ந்த சுந்தரம் மகேந்திரன் என்பவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி அறந்தலாவ பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு 8 பொலிஸார் கொல்லப்பட்டமை தொடர்பாக 1999 ஆம் ஆண்டு யூலை மாதம் 7 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

## மின் உபகரணங்களுடன்

# பென்டோச் பற்றறிகளும் எடுத்துச் செல்ல முடியும்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வன்னிமற்றும்யாழ்ப்பாணம் செல்பவர்கள், மின்சார உபகரணங்களை எடுத்துச் செல்லும் போது, அதில் பொருத்தப்பட்டிருக்கும்பென்டோச் பற்றறிகளையும் எடுத்துச் செல்லலாமென்றுபடைத்தரப்பு அறிவித்துள்ளது.

மின் உபகரணங்களை இயக்க பென்டோச் பற்றறிகள் அவசியமாவதால், அதனைத் தடைசெய்தால் மின் உபகரணங்களை இயக்க முடியாத நிலை ஏற்படுமென்று படைத்தரப்புக்குசுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து பென்டோச்பற்றறிகொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## 3அம்சக் கோரிக்கையை முன்வைத்து

# தொண்டர் ஆசிரியர்கள் மறியல் போராட்டம்

(செம்பியன்பற்று)

தொண்டர் ஆசிரியர்களும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இணைந்து இன்று மேலதிக மாகாண கல்விப்பணிமனையின் முன் மறியல் போராட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில்,

அடுத்த தவணை ஆரம்பிக்கும் போது நியமனம் வழங்கப்பட வேண்டும்.

நியமனம் வழங்காவிடில் போராட்டம் தொடரும்

சேவை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை இவர்கள் முன் வைத்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (உ-42)

# அரசியல் செயற்பாடுகளை விஸ்தரிக்கவுள்ளோம்

## வவு அரசியல்துறை பொறுப்பாளர்

(வவுனியா)

இலங்கை அரசும்- தாமும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை எந்தவிதத்திலும் மீறப்போவதில்லையென விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலவன், தெரிவித்துள்ளார்.

பல சவால்களுக்கு மத்தியில் நாமும் இலங்கைஅரசும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளோம், புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்தை அடைவதற்கான அடித்தளமாகும். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒழுங்கான முறையில் கடைப் பிடிக்கப்படுமாயின் நிரந்தர சமாதானத்துக்கான அர்த்தமுள்ள உடன்படிக்கை ஏற்படுவதற்கு வழிபிறக்கும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி நாம் எமது அரசியல் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கவுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

## மாதாந்த உதவிப் பணம்

(துன்னாலை)

சாவகச்சேரி தபாலகம் இயங்க ஆரம்பித்துள்ளதையடுத்து, அதன் எல்லைக்குள் வசிப்பவர்கள் இங்கே தமது மாதாந்த உதவிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், அவர்களதுபெயர்ப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் மேற்படி தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-41)

## சிந்தனைக்கு விருந்து

### சிவனே! நீ மன்னித் தருள்க

சிவபெருமான் திருவருளே உலகை உய்யச்
செய்யுமென்ற உண்மையினை மறுப்பார் யாரே?
சிவபெருமான் அருள்வேத சிவாக மங்கள்
சிவநெறியை அறிந்தவரை வணங்கற் கென்றே
தவஞானப் பெரியோர்கள் சொல்லி வைத்த
சான்றுரையைப் புறக்கணித்து விட்டுத் தாமே
சிவபெருமான் பிரதிநிதி என்றே வாதம்
செய்வாரைச் சிவனே நீ மன்னிப் பாயே!

- பழையவன்

# போரால் கட்டடங்கள் அழிந்ததுபோல் புனருத்தாரணத்தாலும் கட்டடங்கள் அழியும்

கடந்த 28 ஆம், 29ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறையின ரால் 'யாழ்ப்பாணக் கட்டடக்கலை: பாணிகளும், அம்சங்களும் சூழமைவுப்படுத்தல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று நடத்தப் பட்டது. கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் அங்குரார்ப் பண அமர்வைத் தலைமை தாங்க, துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அங்குரார்ப்பண உரையையும் நுண்கலைத்துறைத்தலைவர் திருமதி நாச்சியார் செல்வ நாயகம் சிறப்புரையும் நிகழ்த்த ஐந்து அமர்வுகளாக மேற்படி கருத்தரங்கு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் எழுதப் பட்ட கலைவரலாற்றின், எழுதப்படாத பக்கங்களைக் கட்டடக்கலையூடாகப் பார்த்தலை அடிப்படை நோக்க மாகக் கொண்ட மேற்படி கருத்தரங்கு, கைவிடப்பட்டு அகதியாகிப் போயிருக்கின்ற, ஏலத்திற்கு விடப்படுகின்ற, வெளிநாட்டுக்குப் போகின்ற அவரசத்தில் சுமையாகப் பார் கப்படுகின்ற அதேசமயம், வெளிநாட்டுப் பணத்தால் புதிதாக உருவாக்கப்படுகின்ற மூதாதையர்களின் வரலாற்றையும், செழுமையையும், கனவையும் - பண்பாட்டின் அனைத்தம்சங்களையும் நிறுவியுள்ள யாழ்ப்பாணக் கட்டடக்கலைப் பாரம்பரியம் மீதான பல்தள விழிப்பை யுண்டு பண்ணுதலையும் தனது பிரதான இலக்காகக் கொண்டிருந்தது.

### யாழ்ப்பாணத்திற்கான தனித்துவம்

கட்டடங்கள் நாடுகளின் இனங்களின் அடையாளமாகக், காணப்படுகின்ற அதேவேளை நாடுகளையும், தேசங்களையும், தேசியங்களையும் கட்டியமைக்கிறது. இதற்கு யாழ்ப்பாணமும் விதிவிலக்கல்ல. குறைந்தது ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட யாழ்ப்பாணத்தின் பல்நிலைப்பட்ட வாழ்நிலையின் பௌதீக வெளிப்பாடான கட்டடங்கள், எவ்விதம் மேலைத்தேசத்து மரபுகளுடன் ஊடாடி, பாரம்பரிய அம்சங்களோடு மேலைத்தேய அம்சங்களும் கலந்த, யாழ்ப்பாணத்திற்கேயான அழகியற் செழுமையுடைய வீடுகளை இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் ஏற்படுத்தின என்பதும், மேலைத்தேய மாதிரியோடு கொண்டுவரப் பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் இயல்பாகவும், பின்னர் பிரக்ஞைபூர்வமாகவும் உள்ளூர் மயப்படுத்தல்களைக் கொண்டிருக்கின்ற அதேவேளை, யாழ்ப்பாணக் கோயில்கள், இந்தியகோயில்களில் இருந்து வேறுபட்ட யாழ்ப்பாணத்திற்கேயான தனித்துவங்களை பெற்றிருந்தன என்பதுவும் கட்டுரையாளர்களால் எடுத்துக்காட்டி நிறுவப்பட்டது. அத்துடன் இன்றைய உடன் நிகழ்காலம் எவ்விதம் இதற்கு எதிர்மாறான போக்குடையதாக இருக்கின்றது என்பதுவும் முதன்மைப்படுத்தப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாணப் புலப்பெயர்வுக்குப் பிற்பட்ட கட்டடங்கள், சாதாரண அரச அதிகாரிகளால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக. யாழ்ப்பாணத்தின் சீதோஷணம், பண்பாடு, தேவை; என்பவற்றுக்குப் பொருந்தாத, வெறும் கட்டமைப்புக்களாக உருவாக்கப்படுகின்றனவாகவும், துறைசார் நிபுணத்துவமும், ஆலோசனைகளும் பெறப்படாமல் மனம்போன போக்கில், அதிகாரத்தை மட்டுமே தகமையாகக் கொண்டு செய்யப்படுவதாகவும், 'மீள்கட்டுமானம்' என்ற பெயரில் எந்த விதமான கவனமெடுப்புக்களுமின்றி விரைவாகக் கட்டியெழுப்பப்படுகின்றன என்பதுவும் பலரால் முன்வைக்கப்பட்ட கருத்தாகக் காணப்பட்டது. சிற்பி போன்ற கைவினை நுட்பம் அற்ற, புதிய தொழிலாளர்களின் அதிகரிப்பும் பெரும்பாதிப்பைக் கட்டடக்கலையில் உருவாக்கும் அதேவேளை, சிறந்த திட்டங்கள் (Plan) கூட இதனால் சிதைவடைந்து போகின்றன என்பதுவும் எடுத்துக்காட்டப்பட்டது.

> யாழ்ப்பாணக் கட்டடக்கலை பாணிகளும் அம்சங்களும் சூழ் அமைவுப்படுத்தல் என்னும் விடயம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையால் கடந்தமாதம் 28,29ம் திகதிகளில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பேசிப்பகிரப்பட்ட விடையங்களின்சாராம்சம் இங்கு தரப்படுகிறது.

### மீள் அமைப்பில் கட்டடக்கலை

இந்தப் பின்னணியில், இனி வருங்காலக்கட்டடக்கலை தொடர்பாகப் பூரண விழிப்போடு இருக்கவேண்டியதைக் கருத்தரங்கு மிகவும் வற்புறுத்தியது. துறைசார்ந்த, பிரதேச ஈடுபாடுடையவர்களின் உதவிகள் பெறப்பட வேண்டும் என்பதுவும், பொதுமக்கள் ஒவ்வொருவரும் இதுபற்றிய விழிப்புடன் செயற்பட வேண்டும்மென வும் வற்புறுத்தப்பட்டது. எவ்வாறு ஒரு அரசியல் திணிப்பு, எவ்விதம் எங்கள் அடையாளங்களை அழிப்பதை உள் நோக்கமாகக் கொண்டதோ, அவ்விதமே வெறும் காசால் நிர்மாணித்துத் திணிக்கப் படும் கட்டடங்களும் அடையாள அழிப்பைச் செய்கின்றன. அதேவேளை, மீள்கட்டுமானத்தின் போது, எப்பொதுமே தவற விடக்கூடாத பிரதான விடயமாக இடவமைப்பு (Placemaking) கட்டடக்கலை முன்னிறுத்தப் பட்டது.

மீள் கட்டுமானங்களின் போது, அழிந்துபோன பழைய இடத்தின் தனிப்பண்பு காப்பாற்றப்பட வேண்டும் அல்லது உருவாக்கப்பட வேண்டும். மக்கள் தமது நிலங்களுக்குத் திரும்பும்போது அதனை தமது நிலமாகவே உணர வேண்டும் ஏனேனில், அந்த இடத்தில்தான் அவர்களது வரலாறு, இருப்பு, இறந்தகால ஞாபகங்கள், சந்ததிகள் யாவும். வாழ்கின்றன மீள் கட்டுமானத்தின் போது உருவாக்கப்படும் கட்டடங்கள் அந்த ஞாபகங்களை, அடையாளத்தை, வாழ்க்கையை தொடர்ந்து பேண வேண்டும். கட்டடக்கலை என்பது வெறும் கட்டடம் பற்றியது மட்டுமல்ல அதன் சுற்றாடலும் (தெரு, மரங்கள், கடல் ..) சேர்ந்து அமைவதே அந்த இடத்தின் பண்பு, மீள் கட்டுமானத்தின் போது இடங்களை (கட்டடங்களையும், அவற்றின் சுற்றாடலையும்) உருவாக்க வேண்டும். அது அடையாளம் பற்றிய பிரக்ஞையினதும், தேசியத்தினதும் அடிப்படையாகும்.

கட்டடக்கலை என்பது இந்த வகையில் 'தேசிய ஒருமைப்பாட்டினதும், அதிகாரம் அல்லது சக்தியினதும் வெளிப்பாடாகும்' என ஹிட்லர் கூறினார். எனவே கட்டடங்களை மிகச்சரியான காரணங்கள் இன்றி அழிப்பது என்பது தேசத்தின் சக்தியையும், ஒருமைப்பாட்டையும் இல்லாது ஒழித்தலுமாகும்.

### கருத்தரங்கில் கலந்து கொண்டோர்

மேற்படி கருத்தரங்கில் 'சுற்றாடலும் கட்டடக்கலையும் ராஜ்ஜியங்கள் தேசங்கள் நாடுகளை உருவாக்குவதில் அதன் பங்கு' என்பது பற்றி றோகிதன் ரட்ணம் அவர்களும், 'சமூக மானுடவியலுக்கான புலமாகக் கட்டடம்' என்ற தலைப்பில் கலாநிதி. நா. சண்முகலிங்கன் அவர்களும், 'யாழ்ப்பாணச் சமூகப் பாரம்பரியத்தில் கட்டடம் பற்றிய எண்ணக்கரு' என்ற தலைப்பில் பேராசிரியர். கா. சிவத்தம்பியும், 'ஈழத்தமிழர் கட்டடக்கலையின் தோற்றமும், வளர்ச்சியும் ஓர் மீள்பார்வை' என்ற தலைப்பில் கலாநிதி ப. புஷ்பரட்ணமும், 'யாழ்ப்பாணத் தேவாலயக் கட்டடங்களும் உள்ளூர் அடையாளங்களும்' என்ற தலைப்பில் திருமதி. வி. சுதர்ஷினியும், இந்துக்கோயிற் கட்டடக்கலை பற்றிய எண்ணக்கரு யாழ்ப்பாணக் கோயில்களை அடிப்படையாகக் கொண்டது' என்ற தலைப்பில் திருமதி. அ. நோ. கிருஷ்ணவேணியும், 'வாஸ்துவும் வீட்டுக்கட்டடக்கலையும்' பற்றி ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவும் 'பண்பாட்டுப்பரவல் காலனியழம், யாழ்ப்பாண வீட்டுக் கட்டடக்கலையும் 1848 - 1948, என்ற தலைப்பில் பா. அகிலனும், 'நிரந்தரமற்றவற்றை நிரந்தரமாக்கல் யாழ்ப்பாணக் கோயில்களின் முகமண்டபங்கள் ஓர் ஆய்வு, என்ற தலைப்பில் தா. சனாதனனும், 'யாழ்ப்பாணத்தில் கட்டடக்கலைஞரும் பொறியியலாளரும்' என்ற தலைப்பில் பொறியியலாளர் எஸ். சுந்தரகுமாரும், 'இடவமைப்புக்கட்டடக்கலை யாழ்ப்பாணத்தின் இன்றைய தேவை' என்ற தலைப்பில் கட்டடக்கலைஞர் ஷயன் குமாரதாசும் உரையாற்ற முறையே, பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர். பொறியியலாளர். ஆ. தில்லைநாதன், ப.சிவநாதன் கட்டடக்கலைஞர் ஷயன் குமாரதாஸ். எம். இராமநாதன் ஆகியோர் இவ் அமர்வுகளைத் தலைமை தாங்கி நடத்தினர்

## இராசி பலன்

18-04-2002
(சித்திரை 5, வியாழன்)
சஷ்டி பி. இ. 4.04 வரை
மிருகசீரிடம்மு.ப. 9.45வரை
ராகுகாலம்-1.33-3.03
நல்லநேரம்-7.33-9.03
சஷ்டி விரதம்

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும். தனவரவு, அந்நியர்சந்திப்பு. வாக்குமேன்மை

**இடபம்**
நிலைக்கேடு, காரியதாமதம், பொருள்விரயம், பெரியோர் மனஸ்தாபம்

**மிதுனம்**
எதிர்பாராத நன்மை, பெரியோர் ஆதரவு, போசன நன்மை, பொருள்சேர்க்கை

**கடகம்**
அலைச்சல், தொழில் நன்மை, மனக்குழப்பம், காரியம்கைகூடும்

**சிங்கம்**
தனலாபம், கௌரவம், காரியஅனுகூலம், கலந்துரையாடல்

**கன்னி**
செய்தொழில்சிறப்பு, சந்தோசமான சம்பவம், முயற்சிகைகூடும், தூரதேசச்செய்தி

**துலாம்**
நிலைமாற்றம், உடல்நலக் குறைவு, பெரியோர்சந்திப்பு, காரியதாமதம்

**விருச்சிகம்**
போசனசுகம், திடீர் மனஸ்தாபம், அமைதிக்குறைவு, காரியதடங்கல்

**தனுசு**
செய்தொழில்சிறப்பு, உறவினரால் நன்மை, மனமகிழ்ச்சி, காரியநன்மை

**மகரம்**
பகைவரால்நன்மை, உத்தியோகச் சிறப்பு, காரியஅனுகூலம், ஆரோக்கியம்

**கும்பம்**
மனச்சஞ்சலம், முயற்சிதாமதம், குடும்பக்கவலை, வியாபார நன்மை

**மீனம்**
ரோகபயம், இலட்சுமிகரம், முயற்சிதாமதம், மாணவர்கள் கல்விச்சிறப்பு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## சம்பளநிலுவை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி 2002 ஆண்டிற்கு முன்பு இளைப்பாறிய இறந்த அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக்குரிய காசோலைகள வலிகாமம்வலயக் கல்விஅலுவலத்தில்இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக மேற்படி வலயக் கணக்காளர் அறிவித்துள்ளார் (எ)

## களுத்துறையில் ஆரம்பித்த கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் மட்டு,நீர்கொழும்பு சிறைகளிலும் தொடர்கிறது

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 8 நாட்களாக மேற்கொண்டு வரும் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டம் மட்டக்களப்பு நீர்கொழும்பு சிறைச்சாலைகளுக்கும் பரவியுள்ளது.

மட்டக்களப்புநீர்கொழும்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் 3 கோரிக்கைகளை முன் வைத்து நேற்று காலை 7.00மணிமுதல் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும்நிபந்தனைஇன்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அண்மையிலுள்ள சிறைச்சாலைகளுக்கு இடம் மாற்ற வேண்டும்.

இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படாத கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்:

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறையில் ஒரு முஸ்லிம் மற்றும் 4 பெண்கள் உட்பட 30 பேரும் நீர்கொழும்புச் சிறையில்16கைதிகளும் இப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதேவேளை களுத்துறைச் சிறைக்கைதிகளின் போராட்டம் கூரை மீது இருந்த நிலையில் நேற்று வரை 8வது நாளாக தொடர்வது குறிப்பிடத்தக்கது: (உ-9)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகள் தொடர்பான கூட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00மணிச்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டுமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-75)

## உயர்தரப் பரீட்சை நிலையங்கள் மாற்றம்

(தென்மராட்சி)

க.பொ.த (உ/த)பரீட்சை நிலையங்கள் சில இடம் மாற்றப்பட்டுள்ளன.

இணுவில் மத்திய கல்லூரி (மண்டப இல 1, மண்டப இல 2) ஆகியன உடுவில் மகளிர் கல்லூரிக்கும்,

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பரீட்சை மண்டபம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன. (உ-77)

## முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை மு.ப. 10.30 மணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் நடைபெறவுள்ளது. (உ-19,6)

வேலன்று வென்றி தருவது
மன்னவன்
கோலதூ உம் கோடா
தெனின்
-குறள்

# வலம்புரி

## பொங்கிய பொங்குதமிழ்

வீரத்தை - சுதந்திரத்தை - பாடிய பாரதி ஓர் கட்டத்தில் வெறுத்துப் போய் 'மெல்லத் தமிழ் சாகும்' எனப் பாடினான். அந்தப் பாரதி இன்றிருந்தால் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற வரலாறு காணாத பொங்கு தமிழ் எழுச்சியை நேரில் கண்டிருந்தால் நிச்சயம் 'இனித் தமிழ் வாழும்' என்று பாடியிருப்பான். அந்தளவில் யாழ் குடா நாட்டு மக்கள் தமது எழுச்சி உணர்வை நேற்றைய பொங்கு தமிழ் பிரவாகத்தில் காட்டியுள்ளனர்.

இராணுவத்தால் சூழப்பட்டிருக்கும் குடா நாட்டில் மக்கள் தமது போராட்ட உணர்வை வெளிப்படுத்தப்பின்நிற்கவில்லை என்பதையே நேற்று நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி உணர்த்துகிறது.

தமிழ் மக்கள் எல்லோரும் ஓர் அணியில் ஓர் தலைவனின் கீழ் ஒன்று திரண்டு விட்ட அற்புதமான நிகழ்வு ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்து விட்டது. விடுதலைப் போராட்டத்தில் தம் உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்கள் யுத்தத்தின் கொடூர தாண்டவத்திற்கு தம் உயிரைக் கொடுத்த பொது மக்கள் நிச்சயம் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். நாம் வாழ்வதற்காக தம் வாழ்வை முடித்துக் கொண்ட தியாகிகளின் அர்ப்பணிப்பில் எழுந்து நின்றதே இப் பொங்கு தமிழ் எனலாம்.

தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு எப்படித்தான் தடைபோட்டாலும் அந்தத் தடையை மக்கள் சமுத்திரம் உடைத்தெறியும். தமிழினம் ஒன்றுபட்டால், ஒருமைப் பட்டால் அதன் சக்தி மாபெரும் சக்தி என்பதை உலகறியச் செய்யமுடியும். எத்தனை குண்டுகள், எத்தனை விமானத் தாக்குதல்கள், எத்தனை பொருளாதாரத்தடைகள், இராணுவ ஆக்கிரமிப்புகள் இவையெல்லாவற்றையும் கடந்து தமிழ் மக்கள் வற்றாத பொய்கையென ஒன்று திரண்டு தமிழர் தாயகம், தமிழர் தேசியம் தமிழர் உரிமை குறித்து வானைப் பிளக்கும் கோஷத்தை எழுப்பினரெனில் தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது என்பதே முடிவு. அதேவேளை தமிழ் மக்கள் சமாதானத்தின் விருப்பத்தையும் உறுதிப் படுத்தியுள்ளது.

# பாரதியாரின் கொள்கைகளில் ஏற்பட்டபற்று வீ. சின்னத்தம்பியைப் 'பாரதிநேசன்' ஆக்கியது

## மறைந்தார் மாண்பு

கி. மயில்வாகனம்
வட்டுக்கோட்டை

கரவெட்டி, கட்டைவேலி கிராமத்தில் வசித்துவந்த வீரகத்தி பத்தினிப்பிள்ளை தம்பதியினக்கு முதன்மகனாக சின்னத்தம்பி 25-05-1939ல் பிறந்தார். ஆரம்பக்கல்வியை கரவை மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தொடரலானார். இவ் வித்தியாலயத்தில் நடைபெற்றபல நிகழ்வுகளில் பங்கு கொண்டு பரிசில்களும் பெற்றார்.

**மின்சார சபையில் லிகிதர்**

உயர் கல்வியை திருஇருதயக் கல்லூரி விக்கினேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி போன்ற கல்லூரிகளிலே கற்றுத் தேறினார், பட்டப் படிப்பைமேற்கொள்ள வேண்டிய நிலையிலே இவர் இலங்கை மின்சாரசபையில் லிகிதர் வேலைக்குத்தெரிவானார். இதனால் படிப்பைத் தொடராது வேலையில் இணைந்தார்.

**மாக்சிஸ வாதி**

ஒரு சிறந்த அன்பாளன், பண்பாளன் அறிஞரான தம்பி அரசியல், இலக்கியம், பொருளாதாரம், வரலாறு, கலை போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். பழகுவதற்கு மிகவும் இனியவராய், எளிமையானவராய் திகழ்ந்தார். பாரதியாரின் சொளகைகள், இலட்சியங்களில் கொண்ட பற்றுக் காரணமாய்த் தனக்கு பாரதி நேசன் என்ற சிறப்பு பெயரையும்சூட்டிக் கொண்டார். ஆரம்பத்தில் திராவிட முன்னேற்ற கழக ஆதரவாளனாக இருந்த அவர்' கம்யூனிஸக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு 'கம்யூனிஸ்ற்' ஆகி இலட்சிய வாழ்வில் தன் கோட்பாட்டிலிருந்து சற்றும் பிசகாது இறுதிவரை சொல்லும், செயலும், இலட்சியமுமாய் வாழ்ந்து முடிந்த உண்மையான மாக்சிஸ வாதியாவார்.

**முற்போக்கு இயக்கம்**

உண்மையானசமதர்மவாதியாகஉறுதியான நிலைப்பாட்டுடன் இறுதிமூச்சுவரை வாழ்ந்து காட்டியவர் தம்பி. இன்று கொள்கை ஒன்று, செயல்ஒன்றாகஎத்தனையோ புத்திஜீவிகள் தடம் மாறிப் போய்விட்டதைப் பார்க்கின்றோம்; இளமைப்பருவத்தில் முற்போக்கான கருத்துக்களால் கவரப்பட்ட தம்பி பல விதமான நெருக்கடிகளுக்கு மத்தியிலும்தமது முற்போக்கு இயக்க வாழ்க்கையைவாழ்ந்து காட்டியவராவர்.

சர்வதேச ரீதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிரிவினையின்போது சண்முகதாசன் தலைமையில் ஊற்றெடுத்த மாவோவாத கம்யூனிஸ்ட்இயக்கத்தில்தன்னை இணைத்துக் கொண்டார். பத்தொனபது வயதிலிருந்து எட்டு வருடங்கள் வரை இலங்கை மின்சார சபையில் லிகிதராய் பணியாற்றிய தம்பி சீனாவில் ஏற்பட்ட பாட்டாளிவர்க்க கலாசாரப் புரட்சியின் போது பீக்கிங் வானொலியின் தமிழ் சேவையில் பணிபுரிய கிடைத்த சந்தர்ப்பத்துக்காக இலங்கை மின்சாரசபை லிகிதர் சேவையை துறந்து சீனா சென்றார். பீக்கிங்கில் அயல் மொழிப்பதிப்பகத்தில்வேலை செய்த கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் மாஸ்டரின் மூத்த புதல்வியான ராணிரத்தின தேவியைத் திருமணம் செய்து கொண்ட தம்பி சீனாவிலே தொடர்ந்து வாழ்ந்திருக்க முடியும்.

**தாய்நாடு திரும்பினார்**

ஆனால் மாவோசேதுங்கின் மறைவை அடுத்து 1976க்கு பின்னர் சீனாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் அரசியல்மாற்றங்கள் காரணமாய் அங்கு தொடர்ந்து பணிபுரிய விரும்பாது குடும்பத்தாருடன் தாய் நாடுதிரும்பினார். சீனா செல்வதற்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகளில் தொழிற்சங்க வாதியாக, இளைஞர் அணியின் தீவிர உறுப்பினராக பத்திரிகையாளராக, விமர்சனக் கட்டுரையாளராக, பலபங்களிப்புகளை செய்த அவர், நாடு திரும்பியதும் கூடுதலான காலத்தை எழுத்துத்துறைக்கே அர்ப்பணித்தார்.

இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தகால கட்டத்தில் அச்சமூகத்தினால் எதிர்நோக்கப்பட்டவேதனைகளையும்சோதனைகளையும் வெளி உலகிற்கு எடுத்து இயம்புவதற்காக தனது எழுத்தாற்றலை முழுமையாகப் பயன்படுத்தினார்.

**சீனாத்தம்பி**

உடல்நலம் குன்றிய தம்பி தனது உடல் நலனையும் கவனியாது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தமது ஆக்கங்கள மூலம் மகத்தான பங்களிப்புகளைச்செய்துவரலானார். பலரையும் உபசரித்து அருமையான கருத்துக்களை வழங்குவார். வட்டுககோட்டையில் இவரை சின்னத்தம்பி என்று சொல்லாமல் சீனாத்தம்பி என்றாலேஅவரைக்குறிககும். பிறர்நலன் கொண்டு தன் உடல்நலன் கவனியாதுஎழுத்துலகிற்கு நேரத்தை செலவிட்டதால் தமது அறுபத்தி இரண்டு வயதில் (62)எம்மிடமிருந்து மறைந்துவிட்டார்.

**மக்கள் உள்ளங்களில்வாழ்வு**

தம்பி மறைந்துவிட்டாரா? இல்லை என்றேசொல்லவேண்டும். ஏன்? தமது இரு கண்களையும் தானம் செய்ததமையால் பார்வையற்று இருவர் ஒளியைபெற்று சந்தோசமாயிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல தன் உடலையே யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்குமாறு இயம்பியதற்கு அமைய அவர் விருப்பப்படி அவரது உடல் மருத்துவபீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டுபொது உடமையாக்கப்பட்டுவிட்டது. இதனால் தம்பிமறைந்தும் மறையாதது போல்மக்கள் உள்ளங்களில், மாணவர் உள்ளங்களில் பத்திரிகையாளர் உள்ளங்களில் பாட்டாளிகளின் உள்ளங்களில், குறிப்பாக எல்லா மக்களின்உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டேயிக்கின்றார்.

இவருக்கு வட்டுக் கோட்டை வாழ்மக்களால் மணி விழா கொண்டாடப்பட்டதையும் மறப்பதற்கில்லை. அந் நிகழ்வால் எல்லாமக்கள் உளளங்களிலும் நீங்கா இடத்தை தனக்கென ஆக்கி அமரத்துவமடைந்து ஓராண்டு நினைவுற்றுளளது.

**வாழ்வுக்குறிப் புகள்**

மூத்த'பத்திரிகையாளர் அமரர் வி.சின்னத்தம்பி (பாரதி நேசன்) வாழ்வு குறிப்புகள் சில.

பிறப்பு-25.05.1939. இறப்பு 17-04-01

பிறப்பிடம் - கரவெட்டி கட்டைவேலி

கற்றபாடசாலைகள்- கரவை மாணிக்கவாசகர் வித்தியாலயம்(ஆரம்பகல்வி)

உயர்கல்வி-திரு இருதயக் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி ஹாட்லிக் கல்லூரி

முக்கியபணிகள் ★கம்யூட்ஸ்னி இயக்க வாதி
,, ★தொழிற் சங்க வாதி
,, ★பத்திரிகையாளர்

1958-1963 ஆசிரியர்குழுவில் (தேசாபிமானி) கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகை

1962-1964 ஆசிரியர் (யுவசத்தி) (கம்யூனிஸ்கட்சி வாலிபர் சங்கஇதழ்)

1963-1966 ஆசிரியர்குழுவில் (தொழிலாளி) (கம்யூனிஸ்ட் கட்சி சண்பிரிவில்)

1982-1983 ஆசிரியர் (மக்கள இலக்கியம்)மாத இதழ்

1986 இணை ஆசிரியர் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை மணிவிழாமலர்.

1987-1995 உதவி ஆசிரியர் (உதயன்) பத்திரிகை, கட்டுரை எழுத்தாளர்.

1960-1961 Trifune.

1966-1982 தினகரன் (ஈழத்தம்பி என்ற, புனைபெயரில்

1982-1995 வீரகேசரி(புதினப்பிரியன், ஈழநாடு முரசொலி, Jribune Lanka Guardian Hot Spring.

1996-17-4-2002 தினக்குரல்(பாரதிநேசன், புதினன்) கலைக்கதிர், தினமணிக்கதிர் நவீனம தமிழ் முரசு Malayan Bulletinபோன்றன. ஒலிபரப்பாளர், ஆசிரியர் 1966-1982பீக்கிங்வானொலியில் தமிழ் பகுதியில் எழுத்தாளர்;- மக்கள் நேயர்கார்த்திகேயன் மாஸ்டர் ஓடடைடா (நாவல்) மொழி பெயர்ப்பாளர். கம்யூனிஸ் கட்சி பீக்கிங் சீன வானொலியின் தமிழ் பகுதி 1981.ல் 5 வது உலக தமிழாராய்ச்சிமகாநாட்டில் துணைவியா ரோடு பங்கேற்பு.

## சாயி அருளமுதம்



மனம் உங்கள் மீது அனேக தந்திரங்களைச் செய்யும், அவற்றில் முதன்மையானது உங்கள் அகங்காரத்தை வளர்த்துஉள்ளே வதியும் உந்து சக்தியையும் பராக்கிரமத்தையும் மூடி மறைப்பதாகும். யமதர்மராஜனுடைய சபையில் கணக்கராகவிருக்கும்சித்திர குப்தரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்.

ஒவ்வொரு உயிருள்ள ஜன்மங்களாலும் செய்யப்படும் நல்லவற்றையும், தீயவற்றையும் பதியும் ஒரு ஏட்டை அவர் வைத்திருக்கிறார். ஒரு ஜீவன் மரணித்தவுடன் அவர் அந்த ஏட்டைச் சபைக்கு கொணர்ந்து அதிலிருக்கும் பற்று வரவு (பாவ- புண்ணியம்) ஆகியவற்றின் மீதியைச் சீர்தூக்கிக் காட்டுகிறார். அப்பொழுது யமதர்மன் பாவங்களைத் தீர்க்கவும், கற்பிக்கவும் வேண்டிய அதற்குரிய தண்டனையை வழங்குகிறார். இந்தச் சித்திர குப்தரின் காரியாலயம் எங்கேயிருக்கிறது? மனிதனுடைய மனத்தில் தான் இருக்கிறது. எந்நேரமும் விழிப்புடனும், ஜாக்கிரதையுடனும் மனத்தில் அவர் வதிகிறார், சித்திர குப்தன் என்னும் பெயரின் பொருள் 'இரகசிய ஓவியம்' என்பதாகும். செயலாக பரிணமிக்கும் (மன) எழுச்சிகளின் இரகசியங்களைப் படமாக்குவதே அவர் பணியாகும்.

மனதில் எழும் எச்சரிக்கைச் சமிஞைகளையும் அவற்றை அசட்டை செய்யும் சந்தர்ப்பங்களையும் அவற்றுக்குக் கட்டுப்படாமல் அவற்றை நிராகரித்த சந்தர்ப்பங்களையும் கூட அவர் பதிந்து கொள்வார். மானுஷீகமான விருப்புக்களுக்கும் மிருக உணர்வினாலேற்படும் மன விருப்புக்களுக்கும் எதிராக இறைவன் கொடுக்கும் எச்சரிக்கைகளை நீங்கள் கவனிக்க வேண்டும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை.

## சிரமதானம்

(ஊர்காவற்றுறை)

வேலணை பிரதேசசெயலர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட நூறுநாள் வேலைத் திட்டத்தில் பல சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வேலணை கிராமிய வைத்தியசாலை வளாகம், பிரதேச செயலக வளாகம், புங்குடுதீவு பாணாவிடைச் சிவன்கோவில் சுற்றாடல், புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய சுற்றாடல் ஆகியவையே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் களினால் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (உ-75)




## சமாதானம் விரைவில் ஏற்படும் என்பதால்

# இடைக்கால நிர்வாகத்தை ஏற்கத் துணிந்துள்ளோம்

### பொங்குதமிழ் நிகழ்வில் கவிஞர் புதுவை இரட்ணதுரை உரை

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாங்களே வெற்றிகரமாகத் தாக்கி அழித்தோம். இத்தாக்குதல் சந்திரிகாவுக்கும் அவரது மாமன் ரத்வத்தைக்கும் சமர்ப்பணம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், கவிஞர் புதுவை இரட்ண துரை தெரிவித்தார்.

யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே புதுவை அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

வன்னிப் பெருநிலப் பரப்பைத் தாண்டி 6வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வரும்போது உள்ளம் உருகி அழுதுவிட்டேன். எமது வாழ்வினை நாமே எழுதுவோம். எமக்கு நாமே தீப்பு வழங்குவோம். அதற்கு இவ்வெழுச்சி கட்டாயம் வழிவகுக்குமென நம்புகிறேன்.

இவ்வெழுச்சியை ஏற்படுத்திய பல்கலைக்கழக சமூகத்திற்கு நன்றி கூறுகின்றேன்.

விடுதலைப் புலிகள் இருந்தார்களோ இல்லையோ இவ்வெழுச்சி இங்குள்ள காவரணகளை நிச்சயம் தகர்க்கும்.

எமது தலைவரை நான் சந்திக்கும்போது இந்த மகத்தான எழுச்சியையும், உணர்வினையும் நிச்சயம் அவரிடம் கூறுவேன்.

எமது இனிய மக்களே நீரடித்து நீர் பிரிவதில்லை. தலைவரின் திருப்பாதம் இந்த மண்ணிலே பதிய வழி செய்கிள்றது. அதனை நிச்சயம் நீங்கள் செய்வீர்கள்.

இந்தக் குடாநாடு இனி அடங்கிவிடும். இந்தச் சமூகம் படுத்துக் கிடந்துவிடும். இந்தச் சமூகம் வாக்களிக்கவே உதவும். இந்தச் சமூகம் இனி ஆமியுடனே வாழும் எனக் கூறியவர்களை நாம் அறிவோம்.

கோயிலுக்குக் கோபுரம் கட்டிக் கொடுப்பவனுக்கு பின்னாலும் சமுர்த்தி வேலைவாய்ப்புக்குப் பின்னாலும் மத குருமார்கள் சந்திரிகா அம்மாவுடன் கடலை வடைக்கும் தான் இந்தச் சமூகம் உதவும் எனக் கூறியவர்களையும் நாம் அறிவோம்.

ஆனால் அப்படிப்பட்டவர்கள் நீங்கள் இல்லை என்பதை நிரூபித்துவிட்டீர்கள்.

விடுதலைப் புலிகள் இங்கு வர வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்தில் நீங்கள் நினைத்ததை நிறைவேற்ற நீங்களேபோதும். இது ஒரு ஆசைவார்த்தை அல்ல. நாளை இடம் பெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குப் பெறக்கூறும் வார்த்தையல்ல.

மக்களே 6 வருட அஞ்ஞான வாசத்திற்குப் பின்னர் இங்கு வந்துள்ளோம். இன்றைய அரசியல் வேலை பார்ப்பதற்கு வெள்ளைச் சட்டை போட்டபடி வந்துள்ளோம்.

மக்களே உங்களுக்கு முன்னால் வருவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையுடன்தான் வந்துள்ளோம்.

விடுதலைப் புலிகளுக்கு இந்தப் பயணத்தில் விருப்பமில்லை. எங்களின் பாதை வித்தியாசமானது. விடுதலைப் புலிளாகிய நாங்கள் வடக்கு கிழக்கு நிர்வாகத்தை ஏற்கப் போகின்றோம். எமது மக்கள் பட்ட துன்ப துயரங்களுக்கு ஓர் ஒத்தணம் கொடுக்கும் செயலாக இது அமையும்.

இந்த இடைக்கால நிர்வாகத்தைக் கட்டிஎழுப்ப நிறைய ஆளணி எமக்கு தேவையாக உள்ளது. எனவே யாழ் இளைஞர்களே, யுவதிகளே எமது அமைப்புடன் உறுப்பினர்களாக இணைந்துகொள்ளுங்கள். நாம் கற்பனை செய்து வைத்திருக்கும் எமது நாட்டினைக் கட்டியெழுப்பவே உங்களை அழைக்கின்றோம்.

ஸ்ரீலங்காவை சிங்களவர்கள் நேசித்ததை விட தமிழர்களே அதிகம் நேசித்தவர்கள். அவ்வாறாக நேசித்த எங்களுக்கு அவர்கள் தந்த பரிசு வீதி முழுக்க காவலரண்களும் முட்கம்பி வேலிகளுமே ஆகும்.

பொறுக்காதையா இந்த இதயம் இதற்கு முன் இருந்த அரசு செய்த அனைத்தையும் மறந்தோம்.

செம்மணியை மறக்கிறோம். நவாலியிலும் நாகர்கோயிலிலும் இரைந்த விமான இரைச்சலை மறக்கிறோம். மனச்சாட்சியை விட்டெறிந்து அனைத்தையும் மறக்கிறோம்.

பேச வாருங்கள் என அழைத்ததை இப்பவும் நம்புகிறோம். மிக விரைவில் இச்சமாதன சூழ்நிலை ஏற்படும் என நிச்சயம் நம்புகிறோம். அதனாலேயே இவ்விடைக்கால நிர்வாகத்தை ஏற்கத் துணிந்துள்ளோம். இது மொழிக்கான ஒரு போராட்டமல்ல. எமது வாழ்விற்கான போராட்டம் எம்மை நாமே தீர்மானிக்கும் போராட்டம்.

நாங்கள் வன்னியில் இருந்த போது இங்கிருந்து வரும் கடிதங்களை கண்டு துடித்தோம். இங்கு வந்தடைய வேண்டு மென்பதற்காக செம்மணிவரையும் வந்தோம்.

அந்த வேளையிலே சர்வதேசம் மீண்டும் ஒரு முறை துரோகம் இளைத்துவிட்டது என்று உணர்ச்சி ததும்ப கவிஞர் புதுவை இரத்தின துரை மேலும் தெரிவித்தர்.

(இ-10-41)

**பொங்கு தமிழ்...**

பிரகடனம் செய்கின்றது.

எமது அபிலாரசைக் குரல் மீண்டும் ஒரு முறை சர்வதேசத்தில் ஸ்ரீலங்கா அரசின், சிங்கள மக்களை மனசாட்சிக் கதவைத் தட்டட்டும்.

எங்கள் தாயகத்தில் இயல்பு நிலை தோற்றவிக்கப்பட்டு எமது தேசிய விடுதலை, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு அவாகளுடன் பேசி எமது புனிதமான அபிலசைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வு அடையப்பட வேண்டும். அதே வேளை இனத்தின் தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த அபிலாசைகளுக்குக் குறைவான எந்தவொரு அரைகுறைத் தீர்வுடனும் சமரசம் செய்யத் தேவையில்லை என ஆணை வழங்குகின்றோம்.

நாங்கள் அலாவிநிற்பது சமாதானத்தையே. ஆனால் சமாதானம் எனப்படுவது எமது சுய கௌவரவம் பேணப்படக் கூடிய ஒன்றாக அமையவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

எமது அன்பிற்குரிய சிங்கள சகோதரர்களே எம் உரிமைகளை நாம் கோரி நிற்பது என்பது உங்கள் உரிமைகளை பறித்தெடுப்பதாகவோ உங்கள் தாயகத்தில் ஓர் அங்குல நிலத்தைக் அபகரிப்பதற்காகவோ அல்ல என்பதை இதே இடத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். ஆனால் ஆக்கிரமிப்பின் சின்னமாக இராணுவம் எமது மண்ணில் நிலைத்திருப்பதை நாம் விரும்பவில்லை என்பதையும் நாம் தெளிவுபடுத்துகின்றோம்.

தமிழீழ மக்களாகிய நாம் எங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்து எம் அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளோடும் என்றென்றும் அணி தொடர்வோம் என இங்கு உறுதி உரைக்கின்றோம்.

*உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும்*
*உலகத்தாய் வயிற்று மைந்தர்*
*நசிந்தினிக் கிடக்கமாட்டோம்*
*நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்*

(இ-6-41)

**யாழ் மண்ணில்...**

கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்துடன் இணைந்து கொண்டனர்.

தீவகத்தில் இருந்து திரண்டெழுந்து வந்த மக்கள் யாழ் நகரத்தில் இருந்தும், வலிகாமத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த மக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் இணைந்து யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான மேடையின் முன்பாக குழுமினர்.

தமிழீழ வரைபடத்தில் நடுவில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கம்பீரமாக தோற்றமளிக்கும் உருவப்படங்கள் மேடையில் வைக்கப்பட்டிருந்தன.

கூட்ட மைதானத்தின் நடுவே நாலாபக்கமும் பட்டொளி வீசிப் பறக்கும் வகையிலான சிவப்பு மஞ்சள்க் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

பல்கலைக்கழக சந்தி, திருநெல்வேலிச்சந்தி கூட்டட மைதானத்தின் நுழைவாயில்ச்சந்தி, கூட்ட மைதானமைதான வாயில் ஆகிய இடங்களில் தமிழீழ வரைபடங்கள் பொறிக்கப்பட்ட வளைவுகள் கட்டப்பட்டிருந்தன.

ஊர்வலத்தில் வந்த மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படங்களைத் தாங்கியவாறு சிவப்பு, மஞ்சள்க் கொடிகளை வாகனங்களில் தாங்கியவாறு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தனித்துவமான தேசிய இனம் என்பவற்றை அங்கீகரிக்கக் கோரும் கோஷங்கள் அடங்கிய சுலோகங்களைத் தாங்கிய வண்ணமும் வந்தனர்.

ஊர்வலத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியோர்கள் என இலட்சக்கணக்கில் கலந்துகொண்டதுடன் முஸ்லிம் மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை உறுதிப்படுத்துவதாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

கூட்ட மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பொங்கு தமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டபோது மக்கள் அனைவரும் எழுந்து நின்று அந்த உறுதிமொழியில் பங்குபற்றினர்.

பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் எழுச்சி மிகு உணர்ச்சி கீதங்கள் ஒலிக்கப்பட்டன. இதனை அடுத்து பல்கலைக்கழக மணவ ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம், மா.வை. சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி, சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மூக்கையா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த புதுவை இரத்தினதுரை, தமிழினி, மற்றும் முஸ்லிம்கள் சார்பில் மௌலவி நபீர், மனித நேய அமைப்புக்களின் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (வ 3,41.19)

**பேச்சுவார்த்தைக்கு...**

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின் வன்னிப்பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நோர்வே தூதுக் குழு சென்று பார்வையிட்டனர். (வ)

**புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் நாளை வெளிவரும்**

மில்க்வைற்
கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்
மில்க்வைற் சோப் இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541

## அதிபர்கள் சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 21ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சுடன் பாடசாலைகளின் வளங்கள், பற்றாக்குறைகள், தேவைகள் குறித்து நேரடியாக பிறிதொரு தினத்தில் கலந்துரையாடவுள்ளதால், பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயன பதார்த்தங்கள், ஆய்வுகூடத் தளபாடங்கள், கணணிகள் மற்றும் பாடசாலைத் தேவைகள் குறித்த எழுத்து மூலமான விவரங்களுடன் பாடசாலை அதிபர்களை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் க.இராசதுரை கோரியுள்ளார். (இ)

**அல்லைப்பிட்டியில்...**

கொண்டு செல்ல முற்பட்டபோது படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார் எனத் தெரி விக்கப்படுகிறது.

இச்சம்பவத்தினால் தீவக மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளச் செல்லும் பொதுமக்கள் அல்லப்பிட்டிச் சோதனைச் சாவடியில் உடற் சோதனைக்குட்படுத்தப்பட மாட்டார்கள் என்று நேற்று முன்தினம் வேலணைக் கடற்படை கட்டளை அதிகாரி தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# சமாதானப் பேச்சு வார்த்தைக்கு புலிகளின் மீதான தடை முட்டுக்கட்டை அல்ல

### ஜனாதிபதி கருதுவதாகத் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கு மிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைக்கு அவர்கள் மீதானதடை முட்டுக்கட்டையாக அமையாது என ஜனாதிபதி கருதுவதாக ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜனாதிபதியின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் பேச்சுவர்த்தைக்கு முன்னதாக தம் மீதான தடை நீக்கப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்துவார்களே ஆனால் தடை நீக்கம் குறித்து விரிவாக ஆராயப்படவேண்டியது அவசியம் ஆகும்.

கிளனிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் புலிகளின் தலைவர் தமது முன்னைய நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை சமாதான முயற்சிகள் தொடர்பாக பிரதமருக்கு ஆலோசனை வழங்கும் கடிதமொன்றை ஜனாதிபதி விரைவில் வழங்கவுள்ளார் என்றும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]

நாகம்ஸ்-சுன்னாகம்
இந்தியாவிலும் நாகம்ஸ் சினிமாவிலும் ஒரே தின வெளியீடு
டொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ்
தினசரி 11.00, 3.00, 6.00 (பு.நே)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
க.பொ.த. (உ.த)
(2004 ஏப்ரலில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான)
வகுப்புக்கான அனுமதி - 2002
மேற்படி வகுப்பின் கலை, விஞ்ஞான, கணித, வர்த்தகப் பிரிவுக்கான ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் அனுமதின்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கிலமொழிமூலமான விஞ்ஞான கணித பிரிவுகளுக்கான அனுமதியும், இருபாலருக்கும் வழங்கப்படவுள்ளன. இவற்றுக்கான அனுமதி கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளதுடன் ஆங்கிலம் மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களும் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
விண்ணப்பப்படிவங்கள் வேலை நாள்களில் அலுவலகத்தில் பெற்று 25.04.2002 வியாழக் கிழமைக்கு முன்பு ஒப்படைக்கப்பட வேண்டும்.
க.இராஜதுரை
அதிபர்
யாழ் மத்திய கல்லூரி
[C/3971]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.